செய்தி வெளியீடு எண்: 068 நாள்:14.05.2021

# செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அரசியல் நாகரிகத்தைக் கடைபிடித்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக 'தி பிரிண்ட்' ஆங்கில இணைய இதழின் நிறுவனர் திரு. சேகர் குப்தா அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில், "Tamil Nadu chief minister M.K.Stalin deserves praise for his initiative to build political consensus and constitute an all party legislators' committee on Covid-19. Other governments should take a cue from it. Public representatives in assemblies and Parliament must be involved in fighting the pandemic. Political one-upmanship and whataboutery must stop." ("தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கொரோனா விவகாரத்தில், அரசியல் ரீதியாக ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டிருப்பதும், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் குழுவை அமைத்திருப்பதும் பாராட்டுக்குரியது. மற்ற மாநில அரசுகளும் இதனைப் பின்பற்ற வேண்டும். பெருந்தொற்றுக்கு எதிரான போரில் நாடாளுமன்ற – சட்டமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபட வேண்டும். அரசியல் தன்முனைப்பும், ஒருவருக்கொருவர் குற்றம்காணும் போக்கும் நிறுத்தப்பட வேண்டும்.") என்று தெரிவித்திருந்தார்.

இதனைக் குறிப்பிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட ட்விட்டர் பதிவு விவரம் வருமாறு:

Thank you Shekhar Gupta & The Print India

COVID19 does not discriminate based on political affiliation and, as public servants, we are morally obligated to stand united in this fight.

Urge all parties across the country to work together to defeat the pandemic.

திரு. சேகர் குப்தா அவர்களுக்கு நன்றி. கொரோனா பெருந்தொற்று அரசியல் ரீதியாக பாகுபாடு காட்டுவதில்லை. அதற்கு எதிரான போராட்டத்தில் மக்கள் பணியில் உள்ள நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கக் கடமைப்பட்டுள்ளோம். கொரோனா பெருந்தொற்றை முறியடிக்க நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**